சிவமயம்




மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் நாகநாதர் சிவசுப்பிரமணியம்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த



# நினைவு மலர்

## 19.05.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



உயர்சைவ வேளாண்குல திலகர்

அமரர்

# நாகநாதர் சிவசுப்பிரமணியம்

அவர்களின் நினைவு தாங்கிய

# நினைவு மலர்

2016-05-19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தந்தையின் தாழ்களில்
## இம்மலர் சமர்ப்பணம் ...



தலைநிமிர்ந்து நாம் வாழவென
நின் தலைகுனிந்து
தெய்வதலமெல்லாம் தொழுதெழுந்து
மெய் வருந்தி உழைத்துயர்ந்த தந்தையே!
வளம் குன்றா வாழ்வு தந்து
வழி எங்கும் ஒளிதந்து
வாஞ்சையோடு அரவணைத்து
தேசம் புகழும் நிலை தந்து
பாச மழை பொழிந்து
பக்குவ நிலையளித்து
உயிரின் உயிராகி
எம்முன் என்றென்றும்
நிறைவாழ்வு வாழ்ந்தவரே!
நெஞ்சமதை வாட்டிடினும் வாடாத
இம்மலரை உன்னினைவாய் எண்ணி
**சமர்ப்பணமாய் வைத்தோம், ஏற்குக.**
அங்கிருந்து
எமக்குநல் ஆசிகளை ஈந்திடுக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை



மண்ணில்
09.08.1928

விண்ணில்
19.04.2016

அமரர்

# நாகநாதர் சிவசுப்பிரமணியம்

அவர்களின்

## திதிவெண்பா

துலங்கிடும் துர்முகி வருடம் தூயசித்திரை பத்தொன்பது
விளங்கிடும் வளர்பிறை திரயோதசி திதி தனில்
இலங்குபுகழ் சிவசுப்பிரமணியம் நற் சீராளன்
சிறப்புடன் நாடினார் உமை சிவன் திருப்பாதங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றகின்றேனே

## தேவாரம்

வடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடை வல்வினைநோய் தீர்ப்பாய் என்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றுந்
துடியணைய இடை மடவாள் பங்கா வென்றுஞ்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றுங்
கடமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடு தறியைக் காண லாமே

## திருவாசகம்

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றிக்
கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன் கருணை
வெள்ளத்து அழுத்தி வினை கடிந்த வேதியனைத்
தில்லை நகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும் காண் அம்மானாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

எழுந்தருளாய் எங்கள் வீதியூடே
ஏதுமில் முனிவரோ (டு) எழுந்தஞானக்
கொழுந்தது வாகிய கூத்தனே நின்
குழையணி காதினில் மாத்திரையும்
செழுந்தட மலர்புரை கண்கள் மூன்றும்
செங்கனி வாயும்என் சிந்தை வெளவ
அழுந்தும் என் ஆருயிர்க் (கு) என்செய்

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னுகதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரிய புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இரவு பகற் பலகாலும் – இயலிசைமுத் தமிழ் கூறித் ;
திரமதனைத் தெளிவாகத் – திருவருளைத் தருவாயே;
பரகருணைப் பெருவாழ்வே – பரசிவதத் துவஞானா.
அரனருள்சற் புதல்வோனே – அருணகிரிப் பெருமாளே;

## திருமந்திரம்

தேடுகின்றேன் திசை எட்டோடு இரண்டையும்
நாடுகின்றேன் நலமேயுடை யானடி
பாடுகின்றேன் பரமேதுணை யாமென
கூடுகின்றேன் குறையாமனத் தாலே.

திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

வையகம் நீடுக, மாமழை மன்னுக,
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக,
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக,
தெய்வ வெண் திரு நீறு சிறக்கவே.

பித்ருக்களின் ஆசீர்வாதம் இருந்தால் எந்தப்பிரச்சினையும் தீர்க்கப்படலாம். அது இல்லாவிட்டால் யாராலும் எதுவும் செய்யமுடியாது. எனவே ஒருவர் தனது பெற்றோருக்கு மரியாதை செய்து தவறாமல் வணங்க வேண்டும். ஏனெனில் தந்தையும், தாயும் பித்ருக்களின் பிரதிநிதிகள் ஆவர். பெற்றோர் காலமானதும் ஒருவர் பக்தியுடனும். உண்மையுடனும் பித்ருகர்மாவை செய்து பித்ருக்களிட மிருந்து ஆசி பெற வேண்டும்.

– ஸ்ரீ ஸ்ரீதர் குருஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் ஊரின் ஆலயங்கள்

கல்வியுடன் கலைநயமும்
செல்வமும் செழிப்புறவே
விழிப்புறு வீரமும் – நிறைந்திடவே
உரம் மிகுந்த உழவர் வாழும்
சிரம் மலர்ந்த சிந்தை தனை
சிறப்புடன் இயற்கை அன்னை
அழகுடன் கொடையாய்த்தந்து
அடுத்தவரை எதிர்நோக்கிடாத
அசையாத வாழ்வும் கொண்டமண்ணில்
மகத்துவமாய் உறையும்
இறைதலங்களாம்
பண்ணைக் கடல் கடந்து
எம் மண்ணினை – நோக்கின்
ஆதியாம் வழி ஐங்கரன்
ஆலயம் எழிலுடன் தென்றல் வீசும்
அழகொளிர் பதிதனிலே
வழிப்பயம் களைந்தருள்புரிய
தந்தையும், தாயும் வீற்றிருந்திடும்
சிவகாமி அம்பாள் தில்லை நடராசப் பெருமான்
தென்திசை பார்த்தமர்ந்து திருக்காட்சிதர
முன்றலில் நின்று நாம் வணங்கிடின்
விசாலாட்சி சமேதராய் விஸ்வநாதப் பெருமான்
அருமையாகவே ஆனந்தக் காட்சிதர
மைந்தன் விநாயகன் திருவெண்காடுறைந்து
திகழ் சித்தி விநாயகனாய் விக்கினங்கள்
தீர்த்து அற்புத அருள் மலர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிவுடனே பொங்கி எழும்
பொன்னிகர் இராஜகோபுரம்
சொற்பனம் நிறைவெய்தி
தண்ணொளி பரவி
கண்குளிர் காட்சிதர
வளமாக எம்மண்வளர
வரமருள் தந்திடுவான்
கணபதி என்றெம்மவர்கள்
கை கூப்பித் தொழுதிடுவர்
கீழ் திசைக் கடலோரம்
கடலலைகள் தாலாட்ட
நயமாகக் காட்சி தந்து
நலிந்தோர்க்கு வரமருள
வலியாரை இனங்கண்டு
வல்ல வினை களையத்
தானாய் வந்தமர்ந்த
தாயவளாம் கற்புடையாள்
கண்ணகி திருத்தலம் – எம்
மண்ணின் மகிமையை
மாண்புற மெருகூட்ட
வேப்பம் திடல் முத்து மாரி அம்மன்
வேண்டும் வரம் நல்க
கற்பக விநாயகன் அற்புத அருள் சொரிய
தோட்ட வெளிவீற்றிருக்கும் ஞானவைரவர் தலமுடன்
பெரியதம்பிரானின் பேரருள் சேர
வங்கக் கடலலைகள் தாலாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கம் களைந்தருள் மல்கும்
அன்னை வேளாங்கன்னி
அருகமைந்து அருள் பொழிய
ஈச்சம் தரவை வைரவர்
அச்சம் தனை நீக்க
சிராஞ்சிக் குளத்தடி வைரவர்
கிராமம் தனைக் காத்தருள
இறை தியானத்தை நினைவூட்டும்
திருந்தாதி மணியோசை தினம் ஒலிக்க
ஜோதி வடிவாய்த் திகழும்
சம்பேதுருவானவர் தேவாலயம்
அன்னவர் அயலினில்
அமர்ந்தருள் புரியும்
கருணை வடிவழகன்
சிறுப்புலம் கந்தன்
கடையிற் சுவாமிகள்
சரித்திரம் கூறிடும்
வந்தமைந்த சந்நிதி
சஞ்சலம் நீக்கிட
மேற்குக் கரையோரம்
மேன்மையுடன் வீற்றிருந்து
விந்தை மிகு வினை தீர்க்கும்
சிந்தைக் கினியதலம்
தில்லையீஸ்வரன் கோயில்
கண்டுப் புளியடிதனில்
நின்று நடனம் புரிந்து
என்றும் அருள் பொழியும்
சிவ உக்கிர வீரபத்திரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்ரங்கள் களைந்தருள
வாகையடி வைரவர்
வயல் வெளியில் வீற்றிருந்து
ஈகையுடன் வரமருள
ஆலமர நிழலில் அற்புதக் காட்சிதரும்
ஆதிவைரவர் அல்லல் களைந்திட
தெற்குக் கடலோரம்
தொன்மைப் புகழ்மிகுந்த
ஐயனார் அருகமைய
அழகுடன் காட்சி தரும்
கொவ்வையிதழ் விரிய நாவல்
கனி நல்கித் தமிழ் சுவைத்த வடிவேலன் உறைந்தபதி
முகப்புவயல் கந்த கோட்டம்
வேண்டுவார்க்கு வேண்டும்
வரம் தந்து தணிந்தருளும்
தென் சாம்பல் கண்ணகியாள்
கண் மலர்ந்து அருள் சொரிய
திடுதிடுக்கை வைரவர்
காவல் நின்று
காத்தருள காத்திரமாய்
களிப்புடனே காட்சிதரும்
ஆலயங்கள் அமைந்த
அழகொளிரும் ஊர்தானே!
மாண்புடைய மண்டைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகநாதர் சிவசுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

சைவவேளாண் குலதிலகர் நாகநாதர் சிவசுப்பிரமணியம் அவர்கள் மண்டைதீவுக் கிராமத்தில் சிறுப்புலம் என்ற பகுதியில் நாகநாதர் தில்லைவனம் தம்பதியினர்க்'கு ஐந்தாவது பிள்ளையாக 1928ம் ஆண்டு பிறந்தார்.

இளமைப் பருவத்தில் கார்த்திகேய வித்தியாலயத்தில் கல்வி கற்றார். பின் தனது 28வது வயதில் வீட்டு அருகில் வசித்து வந்த நாகமுத்து நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வி இராசலட்சுமியை மணம் புரிந்தார். இல்லற வாழ்வின் இனிய நற்பயனாய் பஞ்சபாண்டவர் எனப் போற்றத்தக்க ஐந்து அரிய புதல்வர்களையும் தன் இரு கண்மணிகளென இரு செல்வப் புதல்விகளையும் பெற்றெடுத்தார். தொடர்ந்த தன் இல்வாழ்வில் விவசாயத்தையே தன் பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்த இவர் மண்டை தீவு கிராம சபையின் ஊழியராகவும் கடமையாற்றி வந்தார்.

தன் பிள்ளைகளின் நல் வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்ட இவர் அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அயராது உழைத்து அவர்கள் பட்டங்கள் பல பெற்று வாழ்வில் உயர வழி சமைத்தார்.

கல்வியிற் சிறந்தது போல் அன்னார் இல்லற வாழ்விலும் சிறக்க மூத்த மகன் சிவபாலனுக்கு நாரந்தனையைச் சேர்ந்த கந்தசாமி பொன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுலவாணியையும் இரண்டாவது மகன் ஜெயபாலனுக்கு கச்சாயைச் சேர்ந்த முருகப்பா ஆச்சிமுத்து தம்பதியினரின் மகள் சுதேஸ்வரியையும் மூன்றாவது மகனான சிறிபாலனுக்கு ( கண்ணன்) கொக்குவில் கணபதிப்பிள்ளை விஜயலட்சுமி தம்பதியினரின் மகள் சுஜிதாவையும் நான்காவது மகனான உமாபாலனுக்கு உறவினராகிய கோபாலபிள்ளை இராச குலநாயகி தம்பதியினரின் புதல்வியான கவிதாவையும் மூத்த மகளான கலையரசிக்கு புங்குடுதீவு புலவர் திருநாவுக்கரசு நாகேஸ்வரி தம்பதியினரின் புதல்வன் மதியழகனையும் ஐந்தாவது மகனான மதிபாலனுக்கு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காசிபதி புவனராணி தம்பதியினரின் மகளான ஜெயந்தியையும் கடைசி மகளான அன்பரசிக்கு நெடுந்தீவைச் சேர்ந்த பரமசாமி நவமணிதேவி தம்பதியினரின் மூத்த மகனான நல்லைக்குமரனையும் மணம் முடித்துக் கொடுத்து இல்லற மென்னும் நல்லறத்தை இனிதே நடத்தி இனிய நற்பேறாய் ஆறு ஆண் பேரக் குழந்தைகளையும் ஆறு பெண்பேரக் குழந்தைகளையும் கண்டு ஆனந்தமாக வாழ்ந்தார்.

மண்டைதீவில் கோயில் கொண்டருளிய கடையிற் சுவாமிகளின் அருள் பெற்ற குடும்பத்தில் வந்த இவர் ஆண்டு தோறும் கடையிற்சுவாமியார் குருபூசை செய்து அருள் பெறும் பேறு பெற்றவர். நாட்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் சிதைவு பெற்ற கோயிலை 2011ல் திருத்திக் கட்டி குரு பூசைகளை நடாத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வாழ்வில் துணைவியாருடனும் பிள்ளைகளுடனும் இந்தியாவில் பிரசித்தி பெற்ற சிதம்பரம், சீர்காளி, திருப்பதி போன்ற திருத்தலங்களைத் தரிசித்து பெரும் பேறும் பெற்றார். 2016ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி தனது அறுபதாவது திருமணநாளையும் உறவுகளுடன் கொண்டாடி மகிழ்ந்தார். இவ்விழாவினைக் கொண்டாடி முடித்த பத்தாவது நாளாகிய 19-04-2016 அன்று பிற்பகல்12.50 மணியளவில் இறையுடன் இரண்டறக் கலந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் நாகநாதர் சிவசுப்பிரமணியம் அவர்கள் ஓர் சிறந்த ஏராளன்

சிவபூமியென அழைக்கப்படும் இலங்கைத் தீவின் வடபால் யாழ்ப்பாணத்திற்கு அருகில் அமைந்தள்ள அழகிய தீவுக் கூட்டங்களில் தலைத்தீவாக சிரபுரம் என அழைக்கப்படும் மதிநிறை மண்டைதீவில் மூத்த வேளான் குடிமரபில் பிறந்த ஓர் சிறந்த ஏராளன் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள்.

நீறு இட்ட நெற்றி, புன்முறுவல் பூத்த முகம், நகைச்சுவை கலந்த உரையாடல், உறவு பாராட்டும் பண்பு, உழைப்புக்கும் உயர்வுக்கும் அவர் கொடுத்த மதிப்பு அவரை ஓர் உயர்ந்த மனிதராக எம்முன் காட்டி நின்றது.

அரச பணியுடன் விவசாயத்தையும் மேற்கொண்டு நல்ல துணைவியாரையும் பண்பான மக்கட் செல்வத்தையும் பெற்று வாழ்நாளில் நல்ல வண்ணம் வாழ்ந்த ஒரு பெரு மனிதர்

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு" எனும் வள்ளுவத்தின் வழியில் வாழ்ந்து காட்டிய பெருந்தகையாளன்

எமது மண்ணுக்கு தெய்வீகம் பொருந்திய சித்தர்கள், கல்வியாளர்களை ஈன்ற புகழும் சிவத்திரு கடையிற் சுவாமிகள் வாழ்ந்து கால்பதித்த பெருமையும் உண்டு. இதில் அமரர் அவர்கள் வீட்டில் தான் கடையிற்சுவாமிகள் வாழ்ந்த வாச ஸ்தலமும் இருக்கிறது. வாழ்நாளில் இப்படி ஓர் பெரும் பேறு கிடைக்கப் பெற்றவர் அமரர் அவர்கள். தற்போது "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" எனும் திருவாக்கிற்கு அமைய நிலையான ஆலயம் அமைத்து தமது இறுதிகாலம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் உதவியுடன் வருடம் தோறும் குருபூசை செய்து வழிபடும் பேற்றை சுவாமிகள் இவருக்கு அளித்தருளியமை இவரது ஆன்மீக வாழ்விற்கு கிடைத்த பெரும் பாக்கியமாகும்.

நவீன சிந்தனைகளும், புது நாகரிகமும் தலை விரித்தாடும் தற்கால சூழலில் பழைய பண்பாட்டை இறுதிவரை போற்றி வாழ்ந்து மனிதன் வாழும் காலத்தில் பெறக்கூடிய பலவகை செல்வங்களையும் பெற்று நிறை வாழ்வு வாழ்ந்து நித்தியம் எய்தியமை போற்றுதற்குரியது. உடம்புக்குத் தான் அழிவுண்டு ஆன்மா என்றும் அழிவதில்லை. எனவே, அவரது புனிதமான ஆன்மா என்றும் நமக்கு துணை நிற்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

அவரது பிரிவால் துயருறும் துணைவியார், பிள்ளைகள், சுற்றத்தார், நண்பர்கள் துயர் நீங்கவும் அவரது ஆத்மா மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்பாளின் பாதார விந்தங்களில் நித்தியப் பேறடையவும் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

**இவ்வண்ணம்**
**அருளானந்தம் ஸ்ரீபத்மராஜா (J.P)**
**மண்டைதீவு – 01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறையேதும் இல்லாத நிறை குடம்

தோன்றிற் புகழொடு தோன்றுக – என்னும் வள்ளுவன்
வாக்கின் வரையறை கொண்டே
நிறைவுற வாழ்ந்த கறையிலா உள்ளமே!
உள்ளொன்று புறமொன்று என்றுமே
எண்ணாத ஏற்றம் மிகுந்தவனே!
அமைதியுடன் அரச பணிதனை
ஆர்ப்பரிப்பின்றி அலங்கரித்து
உழுதுண்டு வாழ்ந்த உத்தமனே!
தொழுதுண்டு பின் செல்லா வழுவாத நெஞ்சமே!
காதலித்துக் கரம் பிடித்த – நின் கண்ணான
மனையாள் இராசலெட்சுமி தனை
சொந்தமாய்க் கொண்டு சோபிதமாகவே
பந்தமாய்க் கண்டீர்கள் பார் புகழ் பிள்ளைகளை
தக்க நற்கல்வியை தரமுடன் புகட்டிவைத்து
மிக்க நல் உரமுடன் மேதினியில் மிளர்ந்திடவே
நேர்வழி நின்றுழைத்த கூர்மதி நுட்பனே!
கடையிற் சுவாமிகள் சந்நிதியின்
சாத்வீகத் தொண்டனே!
சிறுப்புலம் கந்தனின்
திருவடிகள் தொழுது நின்றே
நிறைவாழ்வு கொணடீர்கள்!
மண நாளின் மணி விழாவை
மனம் குளிரக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற இதயமே!

குறையேதும் இல்லாத நிறைகுடமே!

இறந்தும் இறவாத ஒரு சிலரில்

நீங்களும் ஒருவரையா

அன்னாரின் ஆன்மா

பரம்பொருளின் பாதார விந்தங்களில்

ஆதாரமடைய

கற்புடைத் தெய்வம்

கண்ணகியை வேண்டுகின்றேன்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

**அன்னாரின் அன்புக்குரிய**
**வீ. சோமசுந்தரம்**
**ஓய்வு நிலை அஞ்சலர்,**
**மண்டைதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி துயராற்றாமை

கண் கண்ட தெய்வமாய் என்
கை பிடித்த நாயகனே
வேதனையில் வாடுகின்றேன்
வேண்டியுமைத் தேடுகின்றேன்
அன்புக் கரம் நீட்டி எமை
ஆதரித்துக் காத்தவரே
பொன் போன்ற புதல்வரையும்
பெண்களையும் பெற்றெடுத்துக்
கண் போன்று காத்து கல்விதந்து
மண் போற்றுமளவுக்கு
எந்தக் குறையும் இல்லாது
என் உடன்பிறப்புக்களையும்
உம்முடன் பிறந்தோர் போல்
அன்புடனே பேணிக்காத்தீர்
எங்கு சென்றீர் எங்கு சென்றீர்
எங்கே நீர் சென்றாலும்
எந்த வேலை செய்தாலும்
அங்கே நானும் அருகிருக்க – அழைப்பீரே
இன்று எனைத் தனியே விட்டு
ஏன் சென்றீர் ஏன்சென்றீர்?
ஐயா உனைத் தேடி
என் உள்ளம் ஏங்குகிறதே
ஒரு நாளும் உனைப் பிரிந்து
வாழ்ந்தறியேன் தெய்வமே
எனைத் தனியே தவிக்க விட்டு
எங்கு நீர் சென்றீரோ.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்துக் கரம்பிடித்து
கண்ணிய வாழ்வுதந்து
கடைசிவரை இணை பிரியாது நின்று
தொன்று தொட்ட நாள் முதலாய்
இன்று வரை என்னுடனே
ஏற்றமுற வாழ்ந்த எந்தன்
எழில் கொஞ்சும் இதயமே!
கண்ணீரில் எனை ஆழ்த்தி
காணாமல் போனதெங்கே?
கட்டிய தாலி தனை
கழற்றி நின் மார்பினிலே
கதிகலங்கி வைத்தேனையா!
முத்தமிட்டு உன் முகத்தில்
மூர்ச்சையுற்று மயங்கிடவே
வைத்து விட்ட மாயமென்ன?
என்னவரே! என் மன்னவனே!
ஏங்கி அழுகின்றேன் ஐயா!
தூங்கியதோ நின் மூச்சு நிரந்தரமாய்
தாங்கிட இதயமில்லை
தனி மரமாயத் தவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிஸில் இருந்து மூத்த மகன்

கண் கண்ட தெய்வமாய்
காத்து எமை வளர்த்த ஐயா
விண் சென்றபோது உங்கள்
அருகில் நான் இல்லையே
கடமை செய்ய கொள்ளி வைக்க
காலம் விட வில்லையே
நெடுந்தூரத்திலிருந்து நானும்
புலம்பி அழுகின்றேனையா

கல்வி தந்து ஊக்கம் தந்து
நல்வழியில் நடக்கச் செய்தீரே
எரிந்து நான் கிடந்தபோது
சிரத்தையுடன் பராமரித்தீரே
வருந்துகின்றேன் கடைசிகாலலத்தில் உமை
பராமரிக்க முடியாப் பாவியானேன்
நல்லைக்கந்தன் திருவடியில் – உங்கள்
ஆன்மா அமைதியடையட்டுமே

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

**பிரிய மகன்**
**சிவபாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்திரிகள் துயரம்

பஞ்ச பாண்டவர்கள ஐவருடன்
நெஞ்சம் மகிழ்ந்திடவே எம் இருவரையும்
விஞ்சும் மகிழ்வுடன் பெற்று
கொஞ்சி வளர்த்த – எங்கள்
மிஞ்சும் புகழ் பூத்த
துஞ்சா மனத்துடைய
தூயவரே! எங்கள் அப்பா!
கண்ணின் மணிகளாக
களிப்புடனே எமைக்கண்டு
பள்ளிப் பருவம் தான்
பரவசமாய் வந்திடவே!
கல்விக் கண் திறக்க
கலாசாலைக் கனுப்பிவைத்து
கச்சிதமாய்க் கல்விதனில்
மெச்சிட நாம் தேறிடவே!
சிறப்புடனே நாம் வாழ
சீர் வரிசை தந்து
தரணியிலே தகுதியுடன்
தளராது வாழ்வதற்கு
பார்மிசை வழி வகுத்த
நேர் வழி நின்ற எங்கள்
கூர்மதியே – எங்கள் அப்பா!
குவலயத்தில் உள்ளவரை
உத்தமரே உமைமறவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைந்தர்களின் மனக்குமுறல்

அன்பின் உருவமே!
அறிவின் சிகரமே!
பண்பின் பிறப்பிடமே!
எம் அருமை அப்பாவே!
அல்லும் பகலும் எம் நலனுக்காய்
அன்றாடதம் எமக்காக
அரச பணி தொடங்கி
ஆடம்பரமின்றி அழகாக
வான் பயிரும் வயல் விளைவும்
வளமாக உற்பவித்து
காளை மாடு இரண்டு பூட்டி
கச்சிதமாய் வண்டி ஓட்டி
கனிவுடனே எமை வளர்த்து
கல்விதனைப் புகட்டி வைத்து
களிப்புடனே கல்விக் கண்
செழிப்புடனே மலர்ந்திடவே!
விழிப்புடனே எமைக்காத்து
வெற்றிப்பாதையில் நாம் பயணிக்க
வேதனையிலா வாழ்வு தந்து
தந்தை மகற்காற்றும் பணி
அவை தனிலே முந்தியிருப்பதெனும்
தித்திக்கும் திருக்குறளின்
தத்துவ நெறி வாழ்ந்த
தந்தையே உமை என்றும்
இதயத்திலே நிறுத்தி– நாம்
இயங்கும் வரை வணங்கிடுவோம்!
எம் அன்னையுடன் அருகமைந்து
அமைதியுடன் ஆலோசனை பகன்று
அழகான வாழ்வுதனை
ஆர்ப்பரிப்பின்றி வாழ்ந்தீர்கள்!
வையத்துள் வாழ்வாங்கு
வாழ வைத்த தெய்வமே!
உமை மறவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் துயரம்

தாயை அறிந்தோம் –எம்
தந்தையைத் தாமறிந்தோம்
ஆன பல உறவுகளை
அப்பப்போ நாமறிந்தோம்
காதலொடு நீர் வளர்த்த
கண்ணான பிள்ளைகளை
வேளை வரக் கைப்பிடித்து
வித்தகமே நாமெல்லாம்
பாகமென வந்துறவே!
பாசமெனப் பிறிதுமொரு
பேருறவு உள்ளதென
பெரியவரே! மாமா நாம்
தேடி அறிந்து கொண்டோம்
தெவிட்டாத நல்லுறவு
ஆக இது வரையும் தான்
அமைந்திடவா எமையெல்லாம்
உள்ளன்புடனே தான் பேணி
பாசமதை நாடி இங்கு
உம்மருகர் பரிதவிக்க
தேசம் விட்டேகி
தேவருலகெய்தியதேன்?
தேடுகின்றொம் நின்தனது
தெய்வத் திருமுகத்தை
நாடினீர்கள் நாதன் தாழ்
நற்சாந்தி அடைந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமைத் தங்கையின் தவிப்பு

என்னருமை உடன் பிறப்பே!
உன்னருமைத் தங்கை நான்
என்னவரை இழந்த துயர்
எள்ளளவும் மறைய வில்லை
உள்ளவரை உறுதியுடன்
உம் அருகில் உன்னதமாய்
உத்தம நல் வாழ்வு கண்டோம்
கண்ணுக்கு இமை போல
காத்து நின்ற எனதண்ணா!
பொன் பெறலாம் பொருள் பெறலாம்
எல்லா வற்றினையும் எளிதாகப் பெற்றிடலாம்
பெற்றோர்க்குப் பின் நின்ற
உற்ற உடன் பிறப்பென்றால்
எப் பிறப்பில் பெறலாம்?
இவ் உண்மைக்கு உதாரணமாய்
உள்ளூறப் பாசமுடன்
பற்றுடைய பண்பான உடன்பிறப்பே!
நீங்கள் சென்ற வழி நான் வந்து
நலன் காண்பதெப்போது?
புலன் இழந்து போய் விட்டேன்
புண்ணியனே எங்குற்றீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர்கள் துயரம்

அன்புள்ளம் கொண்ட அருமைமிகு அப்பப்பா!
ஆளுமைமிக்க ஆருயிரே அம்மப்பா!
உங்கள் பேரர்கள் நாமிங்கே!
பேரன்புக்காகக் காத்து நிற்கின்றொம்.
காத தூரம் சென்றதனால்
தேடுகின்றோம் நாமும் இங்கே!
முத்தாக எமைக்காத்த
மூத்த எம் சொத்தே
பித்தாப் பிறை சூடியவன்
பொற்பாத கமலம்தனில்
நித்தியப் பேரின்பம் பெற
நிதமும் நாம் வேண்டுகிறோம்!

## அருமை மனையாளின் உடன் பிறப்புக்களின் உள்ளக்குமுறல் (மைத்துனர், மைத்துனி)

சொந்தம் நிறை பந்தமே! – எம்
அக்காவின் கைப்பிடித்த அன்பான அத்தானே!
வந்த நின் உறவுகளை வரவேற்கும் பண்பினனே!
நற் சிந்தையுளம் மலர்ந்த சிறப்பான பெருந்தகையே!
தொந்தரவு இல்லாத தூய்மையின் உருவமே!
எந்தநிலை கண்டிடினும் எழிலுடனே வாழ்ந்தவரே!
எமை என்றும் மதித்திட்ட
மாசில்லா மாணிக்கமே!
ஒரு கூட்டுக் குடும்பமாய்
ஒற்றுமையாய் வாழ்ந்தோம்!
பிரிவென்று ஒரு போதும்
இருந்ததில்லை எம்மிடமே
எமதருமை அக்காவின்
கண்ணான கணவனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற நின் பிள்ளைகளின்
பெருமையுறு அப்பாவாய்
பேருவகையுடன் வாழ்ந்தீர்கள்
பாசம் நிறைந்த பண்பாளனே!
நாசம் நினையாத நற்குணசீலனே!
நாளும், பொழுதும் உமை எண்ணுகிறோம்
உமையாள், சிவன் பாதம்தனில்
உறைந்து நற்சாந்தி பெற
இமைப்பொழுதும் இறையடிகள்
தொழுதே நாம் நின்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு திருமுறைக் கழகத்தின் உபசெயலாளர்

**திரு.சி.உமாபாலன்** (RDO) அவர்களின்

அன்புத் தந்தையார்

**சிவத்திரு நாகநாதர் சிவசுப்பிரமணியம்**

(தர்மகர்த்தா, கடையிற் சுவாமிகள் ஆலயம், மண்டைதீவு

ஒய்வுதியர், கிராமசபை, மண்டைதீவு)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி அவரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி!**

**தோற்றம்**
**09.06.1929**

**மறைவு**
**19.04.2016**

## சிவத்திரு நாகநாதர் சிவசுப்பிரமணியம்

(தர்மகர்த்தா, கடையிற் சுவாமிகள் ஆலயம், மண்டைதீவு.
ஒய்வுதியர், கிராமசபை, மண்டைதீவு.)

***திருமுறைக் கழகம்***
***மண்டைதீவு***
***20.04.2016***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியர் திரு சி.மதிபாலன் அவர்களின் அன்புத் தந்தை

## திரு.நாகநாதர் சிவசுப்பிரமணியம்

அவர்கள் 2016.04.19 அன்று காலமானதையிட்டு எமது கல்விச்சமூகம் ஆழ்ந்த துயரடைகின்றது. மேலும் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலைச் சமூகம்**
**யா/மானிப்பாய் மெமோறியல்**
**ஆங்கிலப் பாடசாலை**

(4249)

# கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் எமது சங்கத்தின் பொருளாளருமாகிய திரு.சி.உமாபாலன் அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு.நாகநாதர் சிவசுப்பிரமணியம்

அவர்கள்

19.04.2016 அன்று காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் இன்றையதினம் வராகி அம்மன் வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் பி.ப ஒரு மணியளவில் இடம்பெறும் இறுதிக் கிரியைகளிலும் எமது சங்க அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம், கச்சேரி, யாழ்ப்பாணம்.**

(4248)

# கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு திருமுறைக் கழகத்தின் உப தலைவர் திரு.சி.உமாபாலன் (RDO) அவர்களின் அன்புத் தந்தை

## சிவத்திரு. நா.சிவசுப்பிரமணியம்

தர்மகர்த்தா, கடையிற் சுவாமிகள் ஆலயம், மண்டைதீவு

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திருமுறைக் கழகம், மண்டைதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நெகிழ்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"


என்றுமெமை வாழவைத்த அன்புத்தெய்வம் அமரர் நாகநாதர் சிவசுப்பிரமணியம் இவ்வுலக வாழ்வு நீத்த துயரமதை அறிந்தவுடன் ஓடிவந்து ஆறுதலைத் தேடித்தர முயன்ற அன்பு நெஞ்சுடைய அனைவரையும், அன்னாரின் அந்திமக் கிரியை களின் போது உடனிருந்து உதவியோர், கிரியை தனை செய்த சைவக்குருமார், தொலைபேசி, தொலைநகல் மூலம் ஆறுதலைப் பகிர்ந்தோர், மலர்வளையம் சாத்தி அஞ்சலியை செய்தோர், கண்ணீர் அஞ்சலிகள், வெளியிட்டோர் இன்றெமது அழைப்புதனை ஏற்று இணைந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் இவர்களொடு ஆன்ம சாந்திக் கிரியைகளை கருமமுடன் செய்துவைத்த அந்தண நல் குரமார் களையும் இம்மலரை சிறப்புறவே செய்து தந்த அச்சக நல்மனத்தோரையும் எங்களது நெஞ்சமதில் நிலை நிறுத்தி நன்றிதனை செலுத்து கின்றோம்.

நன்றி

இங்ஙனம்,
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org